

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களை அவமதிக்கும் வகையில் பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், கு.கருணாநிதி, பொன்.முத்து, எஸ்.பன்னீர்செலவம், பிரியா விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், க.சௌந்தரராசன், ஆராஞ்சி ஆறுமுகம், சி.மாரிமுத்து, மேயர் நிர்மலா வேல்மாறன், சு.ராஜாங்கம் உட்பட பலர் உள்ளனர்.



அண்ணல் அம்பேதகர் அவர்களை அவமதித்த உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களை கண்டித்து தலைமைக் கழக அறிவிப்பின்படி, குன்னூர் சட்டமன்ற தொகுதி நகர – ஒன்றிய – பேரூர் கழக அமைப்புகள் சார்பில், குன்னூரில் மாவட்ட திமுக செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில், குன்னூர் தொகுதி பார்வையாளர் திராவிடமணி முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. குன்னூர் நகர செயலாளர் ராமசாமி அனைவரையும் வரவேற்றார். மாநில விளையாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, ஒன்றிய செயலாளர்கள் பிரேம்குமார், லாரன்ஸ், பேரூர் செயலாளர்கள் ரமேஷ்குமார், முத்து, சஞ்சீவ்குமார்,மாட்டின், பொதுக்குழு உறுப்பினர்கள் சத்தக்கத்துல்லா, செல்வம், காளிதாசன், குன்னூர் நகரமன்ற தலைவர் சுசீலா, தலைமை கழக சொற்பொழிவாளர்கள் முபாரக், ஜாகீர் உசேன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பத்மநாபன், வினோத்குமார் உட்பட நகரமன்ற உறுப்பினர்கள், கிளை கழக நிர்வாகிகள், செயல் வீரர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் இந்தியாவின் சட்ட மாமேதை அம்பேத்கரை அவமரியாதை செய்த பாசிச பா.ஜ.க வின் ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகே மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி. நீலமேகம் எம்.எல்.ஏ., து.செல்வம், எம்.இராமசந்திரன், கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமி, மாவட்டக் கழக நிர்வாகிகள் சி.இறைவன், எல்.ஜி.அண்ணா, அ.புண்ணியமூர்த்தி, மணிமாறன், கனகவள்ளி பாலாஜி, மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களை இழிவாக பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷாவைக் கண்டித்து திண்டிவனம் தாலுக்கா அலுவலகம் எதிரில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில்மாவட்ட அவைத் தலைவரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் கண்டன உரை நிகழ்த்தினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், டாக்டர் அம்பேத்கர் குறித்து பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து, புதிய பேருந்து நிலையத்தில் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநில, மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### சூரிய ஒளி மின்சக்தியின் உற்பத்தியைப் பெருக்க,

# ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் என்னென்ன?

## மக்களவையில் – டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, டிச. 20-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர், எஸ். ஜெகத்ரட்சகன் 18 டிசம்பர் 2024 அன்று மக்களவையில்,தொழிற்சாலைகள், வீடுகள் ஆகிய இடங்களில் சூரிய ஒளி மின்சக்தியை மேம்படுத்தவும், வளர்ச்சியை அதிகரிக்கவும். ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா, என்றும்ஒன்றிய அரசின் புதுப்பிக்கதக்க எரிசக்தித் இணையமைச்சர் சிரிபத் யஸ்ஸோ நாயக்அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் புதுப்பிக்கதக்க எரிசக்தித் இணையமைச்சர் அமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு :

நாடு முழுவதும் உள்ள தொழிற்சாலைகள், வீடுகள் மற்றும் அனைத்து நிறுவனங்களிலும் சூரிய ஒளி மின்சக்தி சாதனங்களை நிறுவ புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை கீழ்க்கண்ட நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுத்து வருவதாக இணையமைச்சர் தெரிவித்தார்.

(அ) 40,000 மெகா வாட் திறன் கொண்ட சூரிய சக்தி பூங்காக்களை அமைத்திட தேவையான அனைத்து அனுமதிகளையும் ஒன்றிய அரசு உடனடியாக அளித்து வருகிறது என்றும்,

(ஆ) பிரதம மந்திரி இலவச சூரிய மின்சக்தி திட்டத்தின் கீழ், ஒரு கோடி குடும்பங்களுக்கு வீட்டு கூரையில் சூரிய மின் சக்தி திட்டத்தை நிறுவினால், 300 யூனிட்டுகள் இலவச மின் சாரம், ஒவ்வொரு மாதமும் வழங்கப்படுகிறது என்றும்,

(இ) அதிக சக்தியுள்ள சூரிய மின்சக்தி ஜிகா வாட்கள் அளவிற்கு, உற்பத்தி செய்யும் போது பல்வேறு சலுகைகள் ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது என்றும்,

(ஈ) விவசாயத்திற்கு பயன்படும் நீர் இறைக்கும் குழாய்களுக்கு சூரிய சக்தி பயன்படுத்தப்பட்டால், மாநில அரசுகளுக்கு விவசாயத்திற் கான மானியம் வழங்கப்படுகிறது என்றும்,

(உ) ஒன்றிய பொதுத்துறை நிறுவனங்கள் 12,000 மெகா வாட் அளவிற்கு சூரிய மின்சக்தியை உற்பத்தி செய்யும் நிலையில் ஒன்றிய அரசு கணிசமான நிதியுதவியை அளித்து வருகின்றது என்றும்

(ஊ) பத்து மாநிலங்களில், சூரிய மின்சக்தியை எடுத்துச் செல்ல தேவையான கட்டமைப்புகளை உருவாக்கினால் ஒன்றிய அரசின் நிதியுதவி தொடர்ந்து மாநிலத்தின் மின்கடத்து நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது என்றும். அமைச்சர் தெரிவித்தார்.

மேற்கண்ட அனைத்து திட்டங்களுக்கும் ஒன்றிய அரசு, நிதியுதவி அளித்து சூரிய மின் சக்தியின் வளர்ச்சியை அதிகரிக்க தேவையான முயற்சிகளை எடுத்துள்ளது என ஒன்றிய அரசின் புதுப்பிக்கதக்க எரிசக்தித் இணையமைச்சர் சிரிபத் யஸ்ஸோ நாயக் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### நாட்டின் உள்ளாட்சி அமைப்புகளுக்கு

# வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்த நிதி ஒதுக்கப்படுகிறதா?

## மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!



புதுடெல்லி, டிச. 21-

தமிழ்நாடு உட்பட நாடெங்கும் கடந்த ஐந்தாண்டுகளில் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கீழ் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்த ஒன்றிய அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு (ஊரகம்) நிதி ஒதுக்கீடு செய்தது குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் மக்களவைத் தொகுதி எம்.பி. டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாடு உட்பட நாட்டின் உள்ளாட்சி அமைப்புகளுக்கு (ஊரகம்) கடந்த ஐந்தாண்டுகளில் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கீழ் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்த ஆண்டு வாரியாக அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறதா?

அப்படியானால் அதன் விவரங்கள் யாவை?

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் பயிலரங்குகளை நடத்துவதற்காக நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில் பயிற்சி மையங்களை நிறுவுவதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால் அதற்கான காரணங்கள் என்ன?

இதற்கு ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் கமலேஷ் பாஸ்வான் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள்/திட்டங்களின் கீழ் நிதிகள் தமிழ்நாடு உட்பட மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு ஒதுக்கப்பட்டு அவை சம்பந்தப்பட்ட மாவட்டங்கள்/உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்படுகின்றன. எனவே இந்த அமைச்சகம் எந்த ஊரக உள்ளாட்சி அமைப்புக்கும் நேரடியாக நிதி ஒதுக்குவதில்லை.

உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு பிரத்தியேகமாக பயிற்சி மையங்களை நிறுவுவதற்கு ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் எந்தவொரு திட்டம்/ஏற்பாடும் இல்லை. மேலும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் வழங்கிய தகவலின்படி தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் பயிலரங்குகளை நடத்துவதற்கு நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில் பயிற்சி மையங்களை நிறுவும் திட்டம் எதுவும் ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்திடம் இல்லை. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகளுக்கு-

## வாகை சந்திரசேகர் வேண்டுகோள்!

சென்னை, டிச. 20 -

கழக கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகளுக்கு மாநிலத் தலைவர் வாகை சந்திரசேகர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு: -

நில நிர்வாகிகள் கூட்டத் தில் முடிவு செய்யப்பட்டதற்கு இணங்க மாநில அளவிலான ஒப்பித்தல் போட்டி வரும் 4.1.2025 அன்று அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற உள்ளது. இதனை பள்ளிகளுக்கு தெரி விக்கவும், மேலும், போட்டி நடத்தாமல் உள்ள மாவட்டங்களில் நடத்தி முடித்திடவும் வேண்டுகிறேன்.

மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட மூன்று மாணவர் களையும் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் காலை 9 மணிக்குள் அரங்கத்திற்கு அழைத்து வர வேண்டுகிறேன்.

இவ்வாறு தலைவர் - கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### பூ.செல்வராஜ் தலைமை! குன்னம் தொகுதி – செந்துறை தெற்கு ஒன்றியம் சார்பில்

# துணை முதல்வர் பிறந்தநாள் - அரசின் சாதனை விளக்கத் தெருமுனைக் கூட்டம்!

## நாத்திகம் நாகராஜன் – செசுலீன் சந்தியா தீர்த்தி சிறப்புரை!

அரியலூர், டிச. 21-

அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறை தெற்கு ஒன்றியம் சார்பில் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் மாவட்ட செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி பிலாக்குறிச்சி கிராமத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் பூ.செல்வராஜ் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் கிளை செயலாளர் இராமசாமி வரவேற்றார்.

ஒன்றிய துணை செயலாளர் அன்பரசி, தர்மராஜ், ஆனந்த், பன்னீர் செல்வம், பரமசிவம், ராஜா, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர், நாத்திகம் நாகராஜன், கழக இளம் பேச்சாளர் செசுலீன் சந்தியா தீர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பால சுப்ர மணியன், ஆகியோர் பங்கேற்று, விடியல் மகளிர் பேருந்து பயணம்,நான் முதல்வன், தமிழ்புதல்வர், மகளிர் உரிமைத் தொகை, காலை உணவு திட்டம், மக்களைதேடி மருத்துவம், உள்ளிட்ட திராவிட மாடல் அரசின் மக்கள் நலத்திட்டங்கள் குறித்து விளக்கி பேசினார்கள்.

இந்நிகழ்வில் ஒன்றிய அவைத்தலைவர் தட்சிணாமூர்த்தி, மாவட்ட பிரதிநிதிகள் பூ.காளமேகம், தெய்வசிகாமணி, பி.பழனிவேல், அ.கருணாநிதி, அண்ணாதுரை, கொளஞ்சி, சிவானந்தம், சுப்ரமணியன், செல்வகுமார், இராஜேந்திரன், துரைசாமி, மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் ஆதி. இளங்கோவன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் வெ. இளஞ்செழியன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் சஞ்சய், மாவட்ட வர்த்தகர் அணி துணை தலைவர் வி.கே.இராஜேந்திரன், மாவட்ட பொறியாளர் அணி துணை தலைவர் சிவ பாஸ்கர், வழக்கறிஞர் ஆ.சசிகுமார்,மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சையதுசர்புதீன்,பொன்.மாரிமுத்து, ராமராஜன், விக்னேஷ், தகவல்தொழில்நுட்ப அணி ரமணி, இலக்கியா, மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர். இறுதியாக ஒன்றிய தகவல்தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ர. செந்தமிழ் செல்வன் நன்றி கூறினார்.

### சட்ட மாமேதை அம்பேத்கர் குறித்து அவதூறு கருத்து பேசிய அமித்ஷாவைக் கண்டித்து

# அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கழகத்தினர் ஆர்ப்பாட்டம்!

அரியலூர், டிச, 21-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், வழிகாட்டுதலின்படி,

நாடாளுமன்றத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்த சட்டமேதை புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்து பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மாவட்ட திமுகவினர் அரியலூர், ஜெயங்கொண்டம், திருமானூர்,செந்துறை, ஆண்டிமடம், தா.பழூர், விளாங்குடி, கீழப்பழூர், சுத்தமல்லி, உடையார்பாளையம், உள்ளிட்ட மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் கழகத்தினர் ஈடுபட்டனர்.

அரியலூர் நகர திமுக சார்பில் நகர செயலாளர் இரா.முருகேசன் தலைமையில், மாவட்ட துணை செயலாளர்கள் சந்திரசேகரன், லதாபாலு, ஒன்றிய செயலாளர் கோ. அறிவழகன், ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஜெயங்கொண்டம் நகர திமுக சார்பில் நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி தலைமையில், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா. சந்திரசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், ஒன்றிய செயலாளர் தனசேகர் ஆகியோர் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து ஒன்றிய செயலாளர்கள் இரா.கென்னடி தலைமையில் திருமானூரிலும், செந்துறையில் ஒன்றிய செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி. எழில் மாறன் தலைமையிலும், விளாங்குடியில் ஒன்றிய செயலாளர் மா. அன்பழகன் தலைமையிலும், ஆண்டிமடத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் ரெங்க. முருகன், ஆர்.கலியபெருமாள் தலைமையிலும், தா. பழூரில் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் இரா. அண்ணாதுரை, ஒன்றிய அவைத்தலைவர் சூசைராஜ், தலைமையிலும், சுத்தமல்லியில் ஒன்றிய பொறுப்பாளர் தனவேல் தலைமையிலும், ஜெயங்கொண்டம் தெற்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய செயலாளர் இரா.மணிமாறன் தலைமையில் மீன்சுருட்டியிலும், உடையார்பாளையத்தில் பேரூர் செயலாளர் ப.கோபால கிருஷ்ணன் தலைமையிலும் அரியலூர் மாவட்டம் முழுவதும்

நாடாளுமன்றத்தில் சட்ட மாமேதை புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் குறித்து அவமரியாதை பேச்சினை பதிவிட்ட ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பபினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.